# மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06

**ந.க.எண்: 3045/ஈ2/ 2018  நாள்: 03.07 .2019**

பொருள்: பள்ளிக் கல்வி – புதிய பாடத்திட்டம் – புதிய பாடநூல்கள் – மாநிலக் கருத்தாளர்களுக்கான பணிமனை – சார்ந்து.

பார்வை: 1. பள்ளிக் கல்வித் (க.ஆ.ப) துறை அரசாணை (நிலை) எண். 99, நாள் 22.05.2017
2. 1 முதல் 12ஆம் வகுப்பு வரையில் வரைவுப் பாடத்திட்டம் வெளியீடு, நாள் 20.11.2017.

-----

பார்வை (1)இல் காணும் அரசாணையின்படி, பள்ளிக் கல்விப் பாடத்திட்டத்தை 1–ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் மாற்றியமைக்கும் பணியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதன்படி 2019–2020ஆம் கல்வி ஆண்டில் 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் புதிய பாடப் புத்தகங்கள் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

கற்றல் கற்பித்தல் பணிகளை சிறந்த முறையில் ஆசிரியர்கள் மேற்கொள்ளவும் புதிய பாடப் புத்தகங்கள் குறித்துக் கருத்தாக்கப் பயிற்சியினை மாவட்டக் கருத்தாளர்களைக் கொண்டு ஆசிரியர்களுக்கு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டக் கருத்தாளர்களுக்கு, மாநில கருத்தாளர்களைக் கொண்டு 09.07.2019 & 10.07.2019 மற்றும் 11.07.2019 & 12.07.2019 என இரு கட்டங்களாக தொடக்க மற்றும் உயர் தொடக்க வகுப்பு ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது. பயிற்சி நடைபெறும் நாள் மற்றும் இடம் (வகுப்பு மற்றும் பாடவாரியாக) பங்கேற்பாளர்கள் பட்டியல் (பாடவாரியாக) இணைப்பு 1 மற்றும் 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பில் உள்ள மாவட்டக் கருத்தாளர்களை எவ்வித விடுதல் இன்றி அனைவரும் பயிற்சியில் கலந்து கொள்ளத்தக்க வகையில் பணிவிடுப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. முதன்மைக் கல்வி அலுவலர்கள் இதில் தனிக் கவனம்

செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இப்பயிற்சிக்கான செலவினம் ஒருங்கிணைந்த கல்வி திட்ட இயக்ககத்தால் மேற்கொள்ளப்படவுள்ளதால், இதற்கான நிதி ஒருங்கிணைந்த கல்வி திட்ட இயக்ககத்தின் மூலம் பயிற்சி நடைபெறும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு விடுவிக்கப்படும் என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. பயிற்சி நடத்தி முடித்ததற்கான அறிக்கையை (ஒரு சில புகைப்படங்களுடன்) அனுப்பி வைக்குமாறு முதன்மைக்கல்வி அலுவலர்கள்/ மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இயக்குநர்

இணைப்பு :

1. பயிற்சி நடைபெறும் நாள் மற்றும் இடம் ( வகுப்பு மற்றும் பாடவாரியாக)
2. பங்கேற்பாளர்கள் பட்டியல் (பாடவாரியாக)

பெறுநர்:

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. சார்ந்த மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்

நகல்

1. பள்ளிக் கல்வி முதன்மை செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது .
2. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த கல்வித் திட்ட இயக்ககம், சென்னை-6 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை - 6 அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
4. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை-06 அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.